2002 ஏப்ரல் 5]

99—

கடனுதவி

***1859—திருமதி கே. பவானி கருணாகரன்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதிக்குட்பட்ட அனைத்துக் கிராமங்களுக்கும் ஐ.ஆர்.டி.பி. கடனுதவி வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதியில் ஐ.ஆர்.டி.பி. கடன் உதவி வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி கே. பவானி கருணாகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பொற்பாதங்களை வணங்கி இந்த வினாவை நான் தொடுக்கின்றேன். கடந்த 17 வருடங்களாக எங்களுடைய அரக்கோணம் தொகுதிக்கு அண்ணா தி.மு.க.வின் சட்டமன்ற உறுப்பினர்கள் இல்லாத ஒரு காரணத்தால், எங்கள் தொகுதி மிகவும் வறட்சித் தொகுதியாகக் காணப்படுகிறது. இருந்த ஒரேயொரு எஃகு உருக்காலையையும் கடந்த ஆட்சியிலே மூடிவிட்ட காரணத்தால், இரண்டாயிரம் குடும்பங்கள் இன்று வறுமையில் வாடுகின்றன. எந்தவொரு வளர்ச்சிப் பணியும் இல்லாத என்னுடைய தொகுதியில் இப்போது நாங்கள் நன்றி அறிவிப்புக் கூட்டங்களுக்குச் செல்லுகிறபோது, தொகுதி மக்கள் அனைவரும் இந்த ஐ.ஆர்.டி.பி. லோனுக்காக என்னிடம் மனுக்களைக் கொடுத்துள்ளார்கள். கடந்த ஆட்சியில் இது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றது. தமிழக தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாட்சியிலே என்னுடைய தொகுதி வளர்ச்சி அடைய அமைச்சர் அவர்கள் இந்தக் கடனுதவியைத் திரும்பவும் கொடுப்பார்களா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. துரைராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஐ.ஆர்.டி.பி. திட்டம் என்பது மத்திய அரசின் மூலம் மானிய உதவியோடு தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் கடன் வழங்குகின்ற ஒரு திட்டம். இந்தத் திட்டம் 1-4-1999 ஆம் ஆண்டு முதல் மத்திய அரசின் வழிகாட்டு நெறிமுறைகளிலிருந்து எடுத்து, அதற்குப் பதிலாக, கிராமப்புற சுய வேலைவாய்ப்புத் திட்டம் என்று பல்வேறு திட்டங்களை எல்லாம் ஒன்று சேர்த்து சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் மூலம் குழுக்களாகச் செயல்படுகின்ற குழுக்களுக்கு, மானிய உதவியுடன் கடன் வழங்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 100, திரு. பெ. பழனியப்பன், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர்.

100—

விற்பனைச் சங்கம்

***2192—திரு. பெ. பழனியப்பன்:**

மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாப்பிரெட்டிப்பட்டி வட்ட தலைமையிடத்தில் கூட்டுறவு விவசாய விளைபொருள் விற்பனைச் சங்கம் அமைத்துத் தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திட்டம் எதுவும் இல்லை.

திரு. பெ. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 1991-96-லே முதலமைச்சராக இருந்தபோது, பாப்பிரெட்டிப்பட்டி என்ற பகுதியை அரூர் வட்டத்திலிருந்து பிரித்து, தனி வட்டமாக அமைத்துக் கொடுத்திருந்தார்கள். அந்த பாப்பிரெட்டிப்பட்டி பகுதியிலே உள்ள விவசாயப் பெருங்குடி மக்கள்